உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். மூலக் கேள்வி கேட்டவருக்குதான் இரு துணைக் கேள்விகள் அனுமதிக்கப்படும். (குறுக்கீடு) நீங்கள் விவாதத்தில் பேசும்போது அதைக் குறிப்பிடலாம்.

வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

13—

சீரமைப்பு

***1165—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கீராந்தி அரசு விதைப் பண்ணை இயங்கி வரும் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கீராந்தி அரசு விதைப் பண்ணையில் உள்ள 4 கட்டடங்களில், இரு கட்டடங்கள் முழுவதும் பழுதடைந்து சீர் செய்ய இயலாத நிலையில் உள்ளன. மேலும், இரண்டு கட்டடங்களில் பழுதடைந்துள்ள கதவு, ஜன்னல்களில் வலை அடித்து மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விதைகள், இதர பொருட்களுக்குச் சேதாரம் ஏற்படாத வகையில் தற்காலிகமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், இருக்கையில் இல்லை. மாற்றாக, திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.

திரு. எஸ்.பி. முத்துக்குமரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதி, நெடும்பலம்,

கீராந்தி, தீபம்மாள்பட்டினம் ஆகிய பகுதிகளில் சிறப்பான முறையிலே விதை சுத்திகரிப்பு மையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் கீராந்தி பகுதியிலே இருக்கக்கூடிய விதை சுத்திகரிப்பு மையத்தைப் பொறுத்தவரை, 4 பிரதான கட்டடங்கள் இருக்கின்றன. அந்தப் பிரதான கட்டடங்கள் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அவற்றை அங்கிருக்கக்கூடிய விவசாயப் பெருமக்கள் பயன்பெறுகின்ற வகையிலே புதிய கட்டடங்களாக மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, கீராந்தி அரசு விதைப் பண்ணையில் 4 கிடங்குகள் உள்ளன. இவற்றில் 3 சிமென்ட் கான்கிரீட் கூரையுள்ள கட்டடங்கள்; ஒன்று ஓடு வேய்ந்த கட்டடமாக இருக்கிறது. இவற்றில் 1958–1962–ல் கட்டப்பட்ட இரண்டு கட்டடங்கள் முழுவதும் பழுதடைந்து சீர் செய்ய முடியாத நிலையில் உள்ளன. 1972–ல் கட்டப்பட்ட இரண்டு கட்டடங்களின் மேல்தளம் பழுதடைந்துள்ளது. ஓரளவு பழுதடைந்து சீர் செய்யக்கூடிய நிலையில் உள்ள இரண்டு கட்டடங்களில் பழுதடைந்துள்ள கதவு, ஜன்னல்களில் வலைகள் அடித்து, மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விதைகள், இதர பொருட்களுக்குச் சேதாரம் ஏற்படாத வகையில் தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இருந்தாலும் நடப்பாண்டில் கட்டடப் பராமரிப்புக்கென்று ஒதுக்கப்பட்ட நிதியில் கீராந்தி அரசு விதைப் பண்ணையில் உள்ள கிடங்குகளில் மராமத்துப் பணிக்காக இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.

திரு. எஸ்.பி. முத்துக்குமரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும்

திருத்துறைப்பூண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.*

திரு. அ. பாப்பா சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை வட்டம், இருங்கூரில் ஒரு விதைப் பண்ணை சுமார் 250 ஏக்கரில் இயங்கி வந்தது. அதற்காக பல கட்டடங்களும் கட்டப்பட்டிருந்தன. அந்தப் பண்ணை இயங்காமல் சில காலமாக முடக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தை மீண்டும் விதைப் பண்ணைக்காகவோ அல்லது வேறு ஏதாவது வகையிலோ அரசு உபயோகப்படுத்திக்கொள்ளுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தைப் பொறுத்தவரையில் 41 அரசு விதைப் பண்ணைகள் இயங்கி வருகின்றன. அதாவது, 34 அரசு விதைப் பண்ணைகள், 6 மாநில எண்ணெய் வித்துப் பண்ணைகள், ஒரு பயறு விதைப் பண்ணை ஆகியவை சான்றிடல் மற்றும் ஆதார விதை உற்பத்தி செய்யும் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. இவற்றில் 16 விதைப் பண்ணைகளில் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள புதிய கிடங்குகள் தலா 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இது போதுமானதாக இருக்கிறது. இருந்தாலுங்கூட, நம்முடைய உறுப்பினர் சொல்கின்ற இடத்தைப் பார்த்து, பரிசீலித்து, தேவைக்கேற்ப அந்த இடம் உபயோகப்படுத்திக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*